

திருச்செந்தூர் ஒன்றியம் குரும்பூர் தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி இருபெரும் விழா பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் டாக்டர். ராதாகிருஷ்ணன் விருது பெற்ற ஆசிரியர்களை பாராட்டி மீன் வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் விருது வழங்கினார். உடன் வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ் உமரிசங்கர், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ. ராமஜெயம், நகரச் செயலாளர் வாள் சுடலை, ஆத்தூர் சதிஷ் குமார், ஆழ்வை சேர்மன் ஜனகர்,ஆசிரியர் வட்டார செயலாளர் மகேஷ்துரைசிங், மாவட்ட தலைவர் ஜீவா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நெல்லை ரெட்டியார் பட்டி மலைப்பகுதியில் ரூ.33 கோடியில்

# பொருநை அருங்காட்சியகப் பணிகள் ஆகஸ்ட் மாதம் முடிக்கப்பட்டு முதல்வரால் திறக்கப்படும்!

## நெல்லையில் அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!



நெல்லை, மே 6 -

நெல்லை ரெட்டியார் பட்டி மலைப்பகுதியில் 33 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வரும் பொருநை அருங்காட்சியக பணிகள் முழுவதும் ஆகஸ்ட் மாதம் முடிவடைந்து முதலமைச்சர் அவர்களால் திறக்கப்படும் என்றும் மேலும் நெல்லையில் ரூபாய் 100 கோடி மதிப்பில் அமைய உள்ள நூலகத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. இதன் கட்டுமானப் பணிகள் இந்த நிதியாண்டிலேயே தொடங்கப்படும் என நெல்லையில் பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்தார்.

நெல்லை ரெட்டியார் பட்டி மலைப்பகுதியில் 33 கோடி ரூபாய் மதிப்பில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கும் பணி நடந்து வருகிறது.இதில் ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளை ஆகிய பகுதிகளில் அகழாய்வில் சேகரிக்கப்படும் பொருட்கள் இங்கு வைக்கப்படுகிறது. இதற்கான கட்டுமானப் பணிகளை பொது ப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.கட்டுமானத்தின் தரம்,அங்கு பயன்படுத்தும் டைல்ஸ் உள்ளிட்ட கட்டுமான பொருட்களின் தரம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார். மேலும் பணிகளை விரைந்து முடிக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து நெல்லை பாளையங்கோட்டை பகுதியில் புதிதாக கட்டப்பட இருக்கும் நூலகத்தின் இடத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ வேலு ஆய்வு மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது.

தமிழர்கள் நாகரிகத்தை ஆய்வு செய்து ஆதிச்சநல்லூர்,சிவகளை கொற்கை ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை காட்சிபடுத்த முதலமைச்சர் அவர்கள் 18.05.2023 ல் அடிக்கல் நாட்டி பொருநை அருங்காட்சியகம் பணிகள் நடந்து வருகிறது.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கான அனைத்து வசதிகளுடன் அருங்காட்சியகம் அமைகிறது.13 ஏக்கர் நிலத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு வரும் நிலையில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. ஜூன் முதல் வாரத்தில் அகழாய்வில் கிடைத்த பொருட்கள் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட உள்ளது. மும்பை மற்றும் சென்னையை சேர்ந்த நிறுவனங்கள் காட்சி படுத்தும் பணிகளை 2 மாதம் மேற்கொள்வார்கள். ஆகஸ்ட் மாதத்தில் அருங்காட்சியக பணிகள் அனைத்தும் நிறைவு பெற்று முதலமைச்சர் அவர்களால் திறக்கப்படும். தென் மாவட்டங் களுக்கு முதலமைச்சர் அவர்கள் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து கட்டமைப்புகளை உருவாக்க உத்தரவிட்டு அதன் அடிப்படையில் பணிகள் அறிவிக்கப்பட்டு நடந்து வருகிறது.

நெல்லை குலவணிகர் புரத்தில் Y வடிவ பாலம் அமைக்க வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன்,அப்துல்வஹாப் எம்.எல்.ஏ ஆகியோர் முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்தனர். அவர்களது கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அமைக்கப்படும் Y வடிவ பாலத்திற்கான நில எடுப்பு பணிகள் நடந்து வருகிறது. இதற்காக 99 கோடி ரூபாய் மதிப்பில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு விரைவில் ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் தொடங்கும். திராவிட மாடல் ஆட்சியில் கல்விக்கும்,மருத்துவத் துக்கும் முதலமைச்சர் அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். முதல்வர் அவர்களின் ஆட்சி அமைந்த பின்னர் தான் நூலகங்கள் அதிகளவில் அமைக்கு நடவடிக்கை எடுத்தார்கள். அதன் அடிப்படையில் சென்னை மதுரையில் நூலகம் அமைக்கப்பட்டது. திருச்சியில் பணிநடந்து வருகிறது. தற்போது நடந்த சட்டமன்ற கூட்ட த்தொடரில் நெல்லை,கடலூர், சேலம் ஆகிய மூன்று மாவட்டங் களில் நூலகம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பாளையங்கோட்டை பகுதியில் நூலகம் அமைப்பதற்கான இடத்தினை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தேர்வு செய்து கொடுத்துள்ளனர். அதனை ஆய்வு செய்து இருக்கிறோம் புதிதாக அமையவிருக்கும் நூலகம்76 ஆயிரம் சதுர அடியில் அமைய உள்ளது.இந்த நூலகம் மருத்துவக் கல்லூரி மாணவர்களும் பயன்பெற வேண்டும் என்பதற்கும் பொருத்தமான இடம் தான்.250 இருக்கையுடன் கூடிய ஆடிட்டோரியம் அமைக்கப்பட உள்ளது.

நெல்லை மேற்கு புறவழிச்சாலை33கிலோமீட்டர் தூரத்தில் அமைகிறது , 11 கிலோமீட்டர் தூரத்திற்கு 160 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 22 கிலோமீட்டர் தூரத்திற்கு நிலம் எடுக்கும் பணிகள் நடந்து வருகிறது.மேலும் நூலகத்திற்கான கட்டுமானப் பணிகள் இந்த நிதி ஆண்டிலேயே தொடங்கப்படும். தமிழக நெடுஞ்சாலைகளில் வெளிநாட்டு வாகனங்களின் பெருக்கம் காரணமாக வேகம் தெரியாமல் சென்று விபத்துக்குள் உருவாகிறது.கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விபத்து 14 சதவீதம் குறைந்துள்ளது.தாராபுரம் பகுதியில் நடந்து வரும் பாலம் கட்டுமான பணியிடத்தில் ஏற்பட்ட விபத்து குறித்து தகவல் அறிந்த உடன் முதலமைச்சர் அவர்கள் தகுந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்கள் உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.சம்பவம் தொடர்பாக விபத்து நடந்த இடத்தில் கண்காணிப்பு அதிகாரிகள் மூலம் ஆய்வு நடத்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. பாதுகாப்பு நடைமுறைகள் முறையாக செய்யாமல் இருந்தது கண்டறியப்பட்டால் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நாகப்பட்டினம் இலங்கை இடையே கப்பல் போக்குவரத்து நடந்து வருகிறது.ராமேஸ்வரத்தில் இருந்து கொழும்புவிற்கு கப்பல் போக்குவரத்துக்கு அனுமதி கேட்கப்பட்டுள்ளது. ரூ.160 கோடி நிதியும் ஒன்றிய அமைச்சர் சார்பானந்த சோனாவளிடம் கேட்டுள்ளோம். தமிழக அரசின் நிதி ஆதாரங்களைக் கொண்டு ஒன்றிய அரசு நிதி தராமலே நாங்கள் சிறப்பாக திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். ஒன்றிய அரசு போதுமான நிதி வழங்கினால் இதைவிட சிறப்பாக செயல்படுவோம்

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன் கான்,மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜூ உள்பட பொதுப்பணித்துறை அதிகாரிகள்,கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில்

# தமிழ்நாடு முழுவதும் மண்டல அளவில் முப்பெரும் விழா!

## மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு!

கிருஷ்ணகிரி, மே 6 -

தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மாண்புமிகு முதல்வர் தளபதியார் பிறந்த நாள் முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் முப்பெரும் விழா மிக எழுச்சியோடு கொண்டாடப்படுகிறது.

அதனை ஒட்டி மாநில அமைப்புசரா ஓட்டுநர் அணி செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான டி. செங்குட்டுவன் விடுத்துள்ள அறிக்கையில் நாளை ( 07.05.2025 ) நேரம் காலை 10.00 மணி அளவில் மண்டலம் 1 சார்பில் திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை ஐந்தாவது வடக்கு பைபாஸ் ரோட்டில் உள்ள ஹோட்டல் அஃப்னா பார்க்கில்

மண்டலம் 1ல் இடம் பெறும் மாவட்டங்கள் மற்றும் மாநகரங்கள்

கன்னியாகுமரி 2, திருநெல்வேலி 2, தென்காசி 2, விருதுநகர் 2, தேனி 2, திருநெல்வேலி மாநகர் 1, சிவகாசி மாநகர் 1, நாகர்கோவில் மாநகர் 1 உள்ளிட்ட மாவட்டங்கள் இடம்பெறுகின்றன. ( இதற்கு பொறுப்பாளராக எம்.சிவராஜ் செல் 9443141939 நியமிக்க ப்பட்டுள்ளார்)

மண்டலம் 2 நாள் 08.05.2025 காலை 10.00 மணி அளவில்

தூத்துக்குடி கலைஞர் அரங்கத்தில் மண்டலம் 2ல் இடம் பெறும் மாவட்டங்கள் மற்றும் மாநகரங்கள் இராமநாதபுரம் 1, சிவகங்கை, 1 தூத்துக்குடி 2, மதுரை 2, திண்டுக்கல் 2, மதுரை மாநகர் மாவட்டம் 1, தூத்துக்குடி மாநகர் 1, திண்டுக்கல் மாநகர் 1 (இதற்கு பொறுப்பாளராக ,மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் ஏ.கே. பூபதி நியமிக்கபடுகிறார்) மண்டலம் 4 12.05.2025 அன்று காலை 10.00 மணி அளவில் கொங்கு வேளாளர் கலையரங்கம், சோமனூர், கருமத்தம்பட்டி, கோயமுத்தூரில் மண்டலம் 4 ல் இடம் பெறும் மாவட்டங்கள் மற்றும் மாநகரங்கள் கோவை 3, நீலகிரி 1, திருப்பூர் 4, கரூர் 1, ஈரோடு 3, நாமக்கல் 2 கோவை மாநகர் மாவட்டம் 1, திருப்பூர் மாநகர் 1, ஈரோடு மாநகர் 1, கரூர் மாநகர் 1 (இதற்கு பொறுப்பாளர்கள் K.தினகரன் Ex.MLA செல் 9842275296, மற்றும் Dr. RCM விஷ்ணுபிரபு, செல் 9486019999 ஆகியோர் நியமிக்கபடுகின்றனர் )

மண்டலம் 5 , 13.05.2025 அன்று காலை 10.00 மணி அளவில் விழுப்புரத்தில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது மண்டலம் 5 ல் இடம் பெறும் மாவட்டங்கள் மற்றும் மாநகரங்கள் கள்ளக்குறிச்சி 1, அரியலூர் 1, பெரம்பலூர் 1, கடலூர் 2, விழுப்புரம் 3, திருவண்ணாமலை 2, கடலூர் மாநகர் 1 இதற்கு பொறுப்பாளராக அருணகிரி செல் 9444400189, மற்றும் நெய்வேலிதங்கம் செல் 9884433366 மற்றும் கே. ஸ்ரீதர் செல் 9443712364 நியமிக்கப்படுகின்றனர் திருச்சி, தருமபுரி, சென்னை, பாண்டிச்சேரி மண்டலங்களில் நடைபெறும் முப்பெரும் விழா தேதி பின்னர் அறிவிக்கப்படும் .

எனவே மாநில முழுவதும் எழுச்சியோடு நடைபெற உள்ள இவ்விழாவில் அமைப்புசாரா ஓட்டுநர் அணி உள்ள அனைவரும் தவறாமல் பங்கேற்று விழாவை சிறப்பாக நடத்தி கொடுக்குமாறு மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சின்னசேலம் வடக்கு ஒன்றியம் கடத்தூர் ஊராட்சி ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர், மேனாள் ஒன்றிய குழு உறுப்பினர், தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு சங்க தலைவர், கிளை கழக செயலாளர், கழக மூத்த முன்னோடி மா.அன்பரசு அவர்களின் படத்திறப்பு விழா அவரது இல்லத்தில் 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது, இதில் வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் கலந்துகொண்டு பெரியவரின் திருவுருவ படத்தினை திறந்து வைத்து மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இரங்கல் உரை ஆற்றினார், இதில் சின்னசேலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு துணை தலைவர் அன்புமணிமாறன் முன்னிலை வகித்து திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார், மேலும் இந்த நிகழ்வில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க வீரர்கள் நினைவு நாள்

### இராணி அண்ணா
### மே 6 (1996)



பேரறிஞர் அண்ணா அவர்களின் துணைவியாரும் 'அண்ணியார்' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டவரும்; அண்ணா அவர்களின் பொதுவாழ்க்கைக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் ராணி அம்மையார் அவர்களை தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### நெல்லை கிழக்கு மாவட்டத்தில் திராவிட மாடல் ஆட்சியின்

# 5 ஆம் ஆண்டு தொடக்க நாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!



நெல்லை, மே 6 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியின் ஐந்தாம் ஆண்டு தொடக்க நாள் மிகுந்த மகிழ்ச்சி நிறைந்த எழுச்சியுடன் கொண்டாடுவீர்.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது.

நாடும்,ஏடும் போற்றும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியின் ஐந்தாம் ஆண்டு தொடக்க நாள் நாளை (07.05.2025) ஆகும்.

தமிழ்நாட்டு மக்களுக்கும்,நம் திருநெல்வேலி மாவட்டத்திற்கும் எண்ணற்ற திட்டங்களை தந்து வரும் நம் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் ஆட்சி ஐந்தாம் ஆண்டு தொடக்க நாளாம் நாளை (07.05.2025) மிகச் சிறப்பாக மிகச் சிறப்பாக எழுச்சியுடன் கொண்டாடும் வகையில் நம் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு அனைத்திலும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி, நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. அவசரச் செயற்குழுக் கூட்டம் இன்று (06.05.2025 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு விழுப்புரம், கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. அது சமயம் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்** : 1) இந்திய ஒன்றியத்திற்கே ரோல் மாடலாக அதாவது முன்மாதிரியான முதல்வராக நிகழும் நமது கழக தலைவருக்கு பாராட்டு தெரிவித்தல்

2) கழக அரசின் 4 ஆண்டுகால சாதனைகளை மாவட்டம் முழுவதும் மக்கள் முன் எடுத்து செல்ல சாதனை விளக்க கூட்டங்கள் நடத்துவது

3) ஜுன் 1 அன்று மதுரையில் நடைபெற உள்ள கழக பொதுக்குழு கூட்டத்தில் மாவட்டத்திற்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்வது

4) மற்றும் கழக ஆக்கப் பணிகள்

டாக்டர் **இரா.இலட்சுமணன்** எம்.எல்.ஏ.,
பொறுப்பாளர் – விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க.



திருப்பத்தூர் நகராட்சியின் 32 மற்றும் 33 ஆகிய வார்டுகளில் ஆய்வு மேற்கொண்ட சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி அப்பகுதி மக்களை சந்தித்தார். உடன் நகராட்சி தலைவர் சங்கீதாவெங்கடேஷ், நகராட்சி ஆணையர் சாந்தி, லயன்ஸ் கோபி, ஜீவிதாபார்த்திபன் மற்றும் கழகதோழர்கள், பொதுமக்கள் உடன் இருந்தனர். அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்தனர்.